ශ්‍රී ලංකා උත්තේජක මර්දන නියෝජ්‍යායතනය

ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை

Sri Lanka Anti Doping Agency

ග්‍රාමීය හා පාසල් ක්‍රීඩා යටිතල පහසුකම් ප්‍රවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය

கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

State Ministry of Rural and School Sports Infrastructure Improvement

2020

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
ANNUAL REPORT



/antidopingagency

/SLAntiDoping

slantidoping.org

Sri Lanka Anti-Doping Agency

Sri Lanka Anti-Doping Agency
363/12,Sugathadasa Stadium(Block D),
Stadium Parking Road,
Sirimavo Bandaranaike Mawatha,Colombo 14

Inspiring
True
Sport

இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை

வருடாந்த அறிக்கை 2020


தமிழ்

நோக்கு

சரியான மற்றும் நியாயமான வெற்றிக்காக போதையற்ற இலங்கை விளையாட்டிற்குச் சக்தியூட்டல்.

பணிக்கூற்று

உலக போதைப்பொருள் தடுப்புச் சட்டம் மற்றும் இதன் ஒழுங்கு விதிகளுக்கமைய 2013 இலக்கம் 33 கொண்ட விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தை அமுல்படுத்தல்.





தலைவரின் வாழ்த்துச்செய்தி

2020 ஆம் ஆண்டு இனம், நிறம் மத பேதமின்றி உலக மக்கள் அனைவருக்கும் ஒரு சவாலான ஆண்டாக அமைந்தது. கோவிட் - 19 தொற்றின் உலகளாவிய ரீதியான பாதிப்பானது உலகின் பல நாடுகளின் பொருளாதாரத்திற்கு பாரிய சவாலாக அமைந்தது. ஆயினும் எத்தகைய தடைகள் வந்தாலும் அவற்றை எல்லாம் தாண்டி , அரச ஊழியர்கள் என்ற வகையில் நாம் தொடரச்சியாக எமது கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கை விளையாட்டுத்துறையிலிருந்து தடைசெய்யப்பட்ட பொருட்களை வேரோடு அழித்தல் என்ற நோக்கை முன்னோடியாகக் கொண்டு செயற்படும் எமது நிறுவனமானது கோவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின்போதும் தமது கடமைகளை எவ்வித தடையுமின்றி நிறைவேற்றுவதற்கு கடமைப்பட்டுள்ளது.

தூய்மையான , நியாயமான மற்றும் உண்மையான விளையாட்டிற்காக , ஒரு உறுதியான பயணத்தை மேற்கொள்ளும் இந்நிறுவனமானது ஊக்குமருந்து சோதனைகளை நடாத்துதல், ஊக்குமருந்து பாவனையால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வை விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கு வழங்குதல் மற்றும் ஊக்குமருந்து தொடர்பான விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் போன்ற சேவைகளை இலங்கை பிரஜைகளுக்கு வழங்கி தனது கடமைகளை நிறைவேற்றி வருகின்றது.

சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் கடந்த ஆண்டுகளைப் போன்று இல்லாவிடினும் இவ்வாண்டிலும் விளையாட்டு வீர வீராங்கணைகளின் ஊக்குமருந்து பரிசோதனை நடைமுறைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய தொற்றுநோய் நிலைமையில் விளையாட்டுப் போட்டிகள் எதுவும் இடம்பெறாவிடினும் போட்டிக்கு வெளியேயான ஊக்குமருந்து சோதனைகள் பாரியளவில் மேற்கொள்ளப்பட்டன.

இத்தகையதொரு சவாலான ஆண்டிற்குள் விளையாட்டின் உயிர்ப்புத்தன்மையை பாதுகாப்பதற்காக விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கான விழிப்புணர்வானது அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டமை எமக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும். கோவிட்-19 நிலைமையில் விளையாட்டு வீர வீராங்கணைகள் மத்தியில் சென்று விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல் பாதுகாப்பான முறையல்லாததன் காரணமாக எமது நிறுவனத்தின் பணிப்பாளர் குழுவின் உதவியோடு இத்தகைய செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன்மூலம் ஓரளவுக்கேனும் விளையாட்டுத்துறைசார் சமூகம் ஊக்குமருந்து எதிர்ப்பு தொடர்பான விழிப்புணர்வைப் பெற்றிருக்கும் என நாம் நம்புவதோடு எதிர்காலத்திலும் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினூடாக ஊக்கமருந்து பாவனையை வேரோடு அழித்தல் தொடர்பான திறந்த

உரையாடல்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

இதனைத்தவிர 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பல்வேறு குழப்ப நிலைகள் காரணமாக பிற்போடப்பட்ட ஊக்குமருந்து எதிர்ப்பு விதிமுறைகள் உரியமுறையில் மும்மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு அரச வர்த்தமானியில் வெளியிடமுடிந்தமை எமக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும். மேலும் பணிப்பாளர் குழுக் கூட்டங்கள் இணையத்தளத்தினூடாக (Online) நடாத்தியமை நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் Zoom தொழிநுட்பத்தின் ஊடாக ஊக்குமருந்து எதிர்ப்பு தொடர்பான நிகழ்ச்சிகளில் பங்கேற்றமை (Webinar) தொழிநுட்ப ரீதியாக நாம் எடுத்துவைத்த பிரதான அடியாகும்.

அவ்வாறே, முன்னாள் சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர்.அமல் ஹர்ஷ டி சில்வா அவர்களின் தலைமையில் சுகாதார அமைச்சின் மாவட்ட ரீதியான விளையாட்டுசார் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான (MOIC) ஊக்கமருந்து எதிர்ப்பு தொடர்பான விசேட நிகழ்ச்சியொன்றை நடத்த முடிந்ததோடு அந்நிகழ்ச்சியின்போது மாவட்ட ரீதியாக விளையாட்டுத்துறைக்கு பொறுப்பான மருத்துவ உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பை தடைசெய்யப்பட்ட ஊக்குமருந்து பாவனையை வேரோடு ஒழிப்பதற்காக பெற்றுக்கொள்ள முடிந்தமையானது பெரும் பாக்கியமாகும்.

இவ்வாறாக இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் முக்கிய நோக்கான விளையாட்டில் பயன்படுத்துவதற்குத் தடைசெய்யப்பட்ட பொருட்களை வேரோடு ஒழித்தல் என்ற தொனிப்பொருளை கருத்திற்கொண்டு 2020 ஆம் ஆண்டு முழுவதும் வழமைப்போல் முறையானதும் மற்றும் அர்த்தமுள்ளதுமான வெற்றிகரமான பயணத்தை மேற்கொண்டுள்ளது. அதற்காக பல வகையில் ஒத்துழைப்பு நல்கிய பல்வேறு தரப்பினருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 ஆம் ஆண்டில் எமது நிறுவனத்தின் வசமாகவுள்ள விசேட திட்டங்கள் பலவும் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மைக்காக நிறுவப்பட்டுள்ள ஆராய்ச்சிப் பிரிவானது திறந்துவைக்கப்படவுள்ளது. இந்த ஆராய்ச்சிப் பிரிவின் ஊடாக இலங்கை விளையாட்டுத் துறையின் நலனுக்காக பாரிய சேவையாற்றமுடியும் என்பது எமது நம்பிக்கையாகும். அதனடிப்படையில் எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு எமது நிறுவனத்தின் சேவைகளை மேலும் விரிவடையச்செய்தல் மற்றும் அதனூடாக நிறுவனத்தினுடைய நோக்கங்களை வெற்றிகரமாக அடைவதற்கான வலிமை,தைரியம் மற்றும் அதிர்ஷ்டம் கிட்டப் பிராத்திக்கின்றேன்.

பேராசிரியர் அர்ஜுன டி சில்வா
தலைவர்



பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச்செய்தி

தூய்மையான விளையாட்டுக் கலாச்சாரத்தை உருவாக்குவதில் பிரதான பங்குவகிக்கும் இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை நிறுவப்பட்டு ஏழு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. கடந்த ஏழு வருடங்களில், தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகள் அற்ற இலங்கைக்கான விளையாட்டை உருவாக்குவதில் பல்வேறு பிரிவுகள் ஊடாக தமது பங்களிப்பை வழங்கிருகிறது. .உலகளாவிய ரீதியில் கொரோனா பரவல் காரணமாக உலகம் முழுவதும் விளையாட்டுத்துறை பின்னடைவைச் சந்தித்துள்ளபோதிலும் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி தூய்மையான விளையாட்டு வீர வீராங்கணைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, ஊக்குமருந்து கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை முன்னெடுக்க எமது நிறுவனம் நடவடிக்கை எடுத்துவருகின்றது. கோவிட்-19 தொற்றானது பேரழிவை ஏற்படுத்தியுள்ளதுடன், இதன் காரணமாக 2020 ஆம் ஆண்டு இடம்பெறவிருந்த ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

வழமைபோல் 2020 ஆம் ஆண்டு முழுவதும் விளையாட்டு வீர வீராங்கணைகளின் சிறுநீர்மாதிரியானது பெறப்பட்டு 106 ஊக்குமருந்து கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஊக்குமருந்து கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள்,போட்டியின்போது(In Competition) மற்றும் போட்டிக்கு வெளியே (Out of Competition) சிறுநீர் மாதிரிகள் பெறப்பட்டு மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

உலகளாவிய தொற்றுநோய் நிலைமையின்போதும் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி தடைசெய்யப்பட்ட ஊக்குமருந்து பாவனை மற்றும் எதிர்த்தல் தொடர்பாக 23 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் 956 பேர் இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். இவ் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்,விளையாட்டு வீர வீராங்கணைகள் அவர்களுடைய பெற்றோர்,பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் குறிப்பாக இளைஞர் சமுதாயத்தை இலக்காகக் கொண்டுள்ளது.

இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையில் நிறுவப்படவுள்ள நவீன ஆய்வுகூடத்தின் கட்டுமானப் பணிகள் 2020 ஆம் ஆண்டு முழுவதும் தொடரவுள்ளது. இந்த ஆய்வுகூடத்தில் அதிநவீன உபகரணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் Liquid Chromatography, Triple Quadrupole Mass Spectrophotometer (LC/MS/MS) இயந்திரமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையில்

நிறுவப்பட்டுள்ள இந்த ஆய்வுகூடம் நாம் வசிக்கும் தெற்காசிய பிராந்தியத்தில் காணப்படும் நவீன ஆய்வுகூடங்களில் ஒன்றாக அமையும் என பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவின் ஆதரவுடன் ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது , தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து பாவனை எதிர்ப்பு மற்றும் உளவுத்துறை சார்பான தகவல் சேகரிப்பு பற்றிய அடிப்படை புரிதலையும் பெற்றுக்கொண்டது. 2021 ஆம் ஆண்டுக்குள் எமது நிறுவனத்தில் நிறுவுவதற்கு சிறப்பான அடித்தளமொன்றை அமைப்பது எமது எதிர்ப்பார்ப்பாகும். மேலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை கிராமியளவில் முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவற்றின்போது கிராமியளவில் பரம்பியுள்ள விளையாட்டு வீர வீராங்கணைகள் அவற்றின்போது இலக்காகக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிட்டும்.

இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது , ஊக்குமருந்து கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளை மேற்கொள்ளும்போது “Smart Testing” என்ற கோட்பாட்டிற்கமைய செயற்படுவதற்கு நடவடிக்கையெடுத்து வருகின்றது. இதன்மூலம் ஊக்குமருந்து சோதனைக்குட்படுத்தப்படும் வீர வீராங்கணைகளை மிகக் கூர்மையாக கண்காணிக்கக்கூடிய சந்தர்ப்பம் அமையும். தற்போது மிகவும் பிரபலமான சமூக வளைத்தளங்கள் ஊடாக இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்படுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையால் தயாரிக்கப்பட்ட “அன்றொயிட்” செயலியின் (Doctor App) பயன்பாட்டை இலங்கை விளையாட்டு வீர வீராங்கணைகளிடையே பிரபல்யப்படுத்துவதும் எமது எதிர்ப்பார்ப்பாகும்.

2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் எமது ஆய்வுகூடம் திறக்கப்பட்டு நவீன ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது. கடந்த 2020 ஆம் ஆண்டில் எமது நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக பங்களிப்பு செய்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இலங்கையில் தூய்மையான விளையாட்டிற்காக தற்போது மற்றும் எதிர்காலத்தில் எமது சேவையை பரந்தளவில் வழங்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வைத்தியர் சீவலி ஜயவிக்ரம

பணிப்பாளர் நாயகம்

இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை

அறிமுகம்

தற்போதைய விளையாட்டுத்துறையை பொறுத்தவரை உள்ளார்ந்த திறன் மற்றும் தூய்மையான விளையாட்டே முதலிடம் வகிக்கின்றது. இலங்கையின் விளையாட்டுத்துறையில் காணப்படுகின்ற ஊக்குமருந்து பாவனையை எதிர்த்தல் மற்றும் அது தொடர்பான விழிப்புணர்வை வழங்கும் ஒரே மற்றும் முன்னணி நிறுவனமாக இந்நிறுவனம் விளங்குகிறது.

2013 இலக்கம் 33 விளையாட்டில் ஊக்குமருந்து பாவனைக்கெதிரான இணக்கப்பாட்டுச்சட்டத்தின் 3 வது பிரிவின் அடிப்படையில் இந்நிறுவனமானது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தற்போது இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது விளையாட்டுத்துறை மற்றும் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் சட்டவாரியமாக இயங்கி வருகிறது.

இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பிரதான நோக்கமானது விளையாட்டு வீர வீராங்கணைகளால் பாவனைக்குட்படுத்தக்கூடாத தடைசெய்யப்பட்ட பொருட்களின் பாவனையை வேரோடு அழிப்பதுடன் தூய்மையான விளையாட்டை ஊக்குவிப்பதாகும். இது தொடர்பாக இலங்கையில் செயற்படும் ஒரே நிறுவனம் எமது நிறுவனமாகும். சர்வதேச ரீதியாக ஊக்குமருந்து பாவனையை எதிர்ப்பதற்காக செயற்படும் சர்வதேச ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான நிறுவனங்களுடன் எமது நிறுவனமானது கூட்டுணர்வுடன் செயற்பட்டு வருகின்றது.

நோக்கம்

சட்டத்தின் II வது வாசகத்திற்கமைய முகவராண்மையின் நோக்கமாக அமைவது:-

(அ) விளையாட்டுக்களில் ஈடுபடும் போது தடை செய்யப்பட்ட ஊக்குமருந்து பயன்பாட்டை ஒழிப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

(ஆ) விளையாட்டுக்களுடன் தொடர்புபட்ட ஊக்குமருந்து பயன்பாடு தொடர்பான துறைகள் மற்றும் உரிய ஆராய்ச்சி உட்பட முகவராண்மைக்கு சமமான செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஏனைய சர்வதேச அமைப்புக்களுடன் பரஸ்பர ரீதியில் பரிசோதனை செயற்பாடுகளை ஊக்குவித்தல்.

இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கீழ் குறிப்பிட்ட சேவைகளை வழங்குகின்றது.

1 தேசிய, சர்வதேச மற்றும் பாடசாலை மட்டத்தில் விளையாட்டு வீர வீராங்கணைகளின் ஊக்குமருந்து பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

2 தடை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட விளையாட்டு வீரர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

3 தடை செய்யப்பட்ட பொருள் பயன்பாடு மற்றும் அதன் பாதக விளைவுகள் தொடர்பாக விளையாட்டு வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஏனைய விளையாட்டுத் துறையில் ஈடுபடுவோருக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

4 நாடு பூராகவும் மாவட்ட மட்டத்தில் UNESCO நிறுவனத்தின் நிதி உதவியுடன் விளையாட்டின் போது பயன்படுத்தப்படும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகள் உட்பட அதன் பாதக விளைவுகள் மற்றும் தடை செய்யப்பட்ட பொருள் பரிசோதனை தொடர்பாக அறிவுறுத்தும் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்.

5 விளையாட்டில் ஈடுபடும் போது தடை செய்யப்பட்ட பொருள் பயன்பாடு தொடர்பாக பாடசாலை மாணவர்களை அறிவுறுத்துவதற்காக பாடசாலை பாடவிதானத்தில் இப் பிரிவினை இணைப்பதற்கான செயற்பாடுகளை வகுத்தல் .

பணிப்பாளர் சபை



பேராசிரியர் அர்ஜுன டி சில்வா
தலைவர்



பேராசிரியர் லால் ஜயக்கொடி
உறுப்பினர்



பேராசிரியர் ரவீந்திர பர்ணாண்டோ
உறுப்பினர்



திரு.டப்ளியு.ஏ.குலசூரிய
உறுப்பினர்



வைத்தியர் லால் ஏக்கநாயக்க
உறுப்பினர



திரு.சஜித் ஜயலால்
உறுப்பினர்



திரு.எஸ்.ஜ.எம்.ரோசா
உறுப்பினர்



வைத்தியர்.அன்வர் ஹம்டானி
உறுப்பினர்



வைத்தியர் நிஹால் முனசிங்க
உறுப்பினர்



திரு.ஏ.ஜே.எஸ்.எஸ்.எதிரிசூரிய
உறுப்பினர்

தற்போதைய பணியாளர் சபை



வைத்தியர் சீவலி ஜயவிக்ரம
பணிப்பாளர் நாயகம்



வைத்தியர். எஸ்.பீ.பீ.டி. அல்விஸ்
பணிப்பாளர் (கல்வி மற்றும் பரிசோதனை)



ஜே.எம்.ஜே.ஜே.ஜயசுந்தர
பணிப்பாளர் குழு செயலாளர் மற்றும் சட்ட உத்தியோகத்தர்



எச்.எம்.சீ.ஜி.தயாரத்ன
கணக்காளர்



பீ.என்.ஜே.பர்ணண்டோ
ஆராய்ச்சி உத்தியோகத்தர்



ஏ.எஸ்.டி.பிகேரா
ஆராய்ச்சி உத்தியோகத்தர்



எஸ்.ஏ.என்.ரஷானி
ஆராய்ச்சி உத்தியோகத்தர்



ஜீ.என்.எஸ்.பர்ணாண்டோ
நிர்வாக உத்தியோகத்தர்



வை.ஏ.யூ.மேதாவி
தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்



கே.ஆர்..கனகசபாபதி
மொழி பெயர்ப்பாளர்



டி.கே.ஜே.சத்துரிக்கா
அபிவிருத்தி உத்தியோகத்தர



எம்.ஜி.டி.டீ.சேனாரத்ன

முகாமைத்துவ உதவியாளர்



எம்.ஜி.எஸ்.ஐ.கருணாதிலக

முகாமைத்துவ உதவியாளர்



என்.ஜீ.எஸ்.எச்.விஜேரத்ன

முகாமைத்துவ உதவியாளர்



ஏ.ஜி.பீ.டீ.திலகரத்ன

முகாமைத்துவ உதவியாளர்



ஏ.ஜி.எல்.கே.எஸ்.குணவர்த்தன

அலுவலக உதவியாளர்



எம்.டீ.ஆர்.டீ.ஜயவீர

அலுவலக உதவியாளர்



ஏ.ஐ.ஆர்.சேனாரத்ன

சாரதி



கே.எம்.எல்.வெவேதென்ன

சாரதி




கே.பி.சீ.ப்ரேமரத்ன

சாரதி

இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை

- நிறுவன ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



பணியாளர் குழாம் தொடர்பான விபரங்கள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மைக்காக 28 பணியாளர்களைக்கொண்ட குழாமுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2020/12/31 இல் உள்ளவாறான இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பணியாளர் குழாம் கீழ்வருமாறு.


	பதவி	சம்பள அளவீடு	பதவி எண்ணிக்கை	தற்போதைய பணியாளர்களின் எண்ணிக்கை	பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை
01.	பணிப்பாளர் நாயகம்	HM 2-1	1	1	
02.	பணிப்பாளர்	HM 1-1	2		2
03.	உதவிப் பணிப்பாளர் /பிரதிப்பணிப்பாளர்	MM 1-1	2		2
04.	கணக்காளர்	MM 1-1	1	1	
05.	சட்ட உத்தியோகத்தர் / பணிப்பாளர் சபை செயலாளர்	MM 1-1	1	1	
06.	ஆராய்ச்சி உத்தியோகத்தர்	AR 1	3	3	
07.	நிர்வாக உத்தியோகத்தர்	JM 1-1	1	1	
08.	தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்	JM 1-1	1	1	
09.	மொழி பெயர்ப்பாளர்	MA-4	1	1	
10.	அபிவிருத்தி உத்தியோகத்தர்	MA 3	3	1	2
11.	முகாமைத்துவ உதவியாளர்	MA 1-1	4	4	
12	தொழில்நுட்ப உதவியாளர்	MA 2-1	1		1
13.	சாரதி	PL 3	4	3	1
14.	அலுவலக உதவியாளர்	PL 1	3	2	1
மொத்தம்			**28**	**19**	**9**

ஊக்குமருந்து பரிசோதனைகள்

தூய்மையான விளையாட்டை உருவாக்கி, தூய்மையான விளையாட்டு வீரர்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் 2020 ஆம் ஆண்டில் இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையால் நடாத்தப்பட்ட ஊக்குமருந்து பரிசோதனைகள் தொடர்பான விபரம் பின்வருமாறு.

இல	விளையாட்டு	ஊக்கமருந்து சோதனைகளின் எண்ணிக்கை	ஊக்கமருந்து பாவனை உறுதிபடுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள
1.	ரக்பி	20	01
2.	மெய்வல்லுனர் போட்டி	54	-
3.	சைக்கிளோட்டப் போட்டி	06	01
4.	பழு தூக்குதல்	04	-
5.	குத்துச்சண்டை	03	-
6.	கிரிக்கட்	08	-
7.	வலு தூக்குதல்	03	-
8.	பரா மெய்வல்லுனர் போட்டி	08	-
	மொத்தம்	**106**	**02**

விளையாட்டிற்கு ஏற்ப ஊக்குமருந்து பரிசோதனைகளை மேற்கொள்ளல் - 2020



விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

2020 ஆம் ஆண்டு சனவரி முதல் டிசம்பர் மாதம் வரை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையால் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கீழ்வருமாறு.

திகதி	இடம்	யாருக்காக	பங்குபற்றியோரின் எண்ணிக்கை
09.01.2020	கண்டி விளையாட்டுக்கழகம் நித்தவெல	ரக்பி வீரர்கள்	32
10.01.2020	விளையாட்டு மருத்துவ நிறுவனம்	மெய்வல்லுனர் போட்டிகளுக்கான கனிஷ்ட குழாம்	55
07.02.2020	சபரகமுவ பல்கலைக்கழகம்	சபரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள்	131
11.02.2020	இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பணிப்பாளர் சபை குழுக்கூட்ட மண்டபம்	பிலியட் மற்றும் ஸனூக்கர் விளையாட்டு வீரர்கள்	8
13.02.2020	இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பணிப்பாளர் சபை குழுக்கூட்ட மண்டபம்	தேசிய வலைப்பந்தாட்ட அணி	20
14.02.2020	இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பணிப்பாளர் சபை குழுக்கூட்ட மண்டபம்	இயன்முறையாளர்கள்	60
08.06.2020	மெய்நிகர் விரிவுரை	கொழும்பு பல்கலைக்கழகம்	25
08.07.2020	விளையாட்டு வீரர்களுக்கான விடுதி - டொரிங்டன்	பழு தூக்கும் வீர வீராங்கணைகள்	6
15.07.2020	விளையாட்டு வீரர்களுக்கான விடுதி - டொரிங்டன்	வூசு வீரர்கள்	10
22.07.2020	விளையாட்டு வீரர்களுக்கான விடுதி - டொரிங்டன்	வூசு வீரர்கள்	8
04.08.2020	கெத்தாராம விளையாட்டு மைதானம்	கிரிக்கட் வீரர்கள்	27
06.08.2020	கெத்தாராம விளையாட்டு மைதானம்	கிரிக்கட் வீரர்கள்	6
13.08.2020	இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பணிப்பாளர் சபை குழுக்கூட்ட மண்டபம்	மருத்துவபீட மாணவர்கள் - கொழும்பு பல்கலைக்கழகம்	7
19.08.2020	விமானப்படை முகாம்	விமானப்படை விளையாட்டுப் பிரிவு	168
26.08.2020	இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் கேட்போர் கூடம்	சுகாதார அமைச்சின் விளையாட்டு வைத்திய உத்தியோகத்தர்கள்	18
04.09.2020.	விளையாட்டு வைத்திய நிறுவனம்	2020 தடகள விளையாட்டு Elite குழாம்	13
16.09.2020	விளையாட்டு வைத்திய நிறுவனம்	பௌதீக சிகிச்சையாளர்கள்	5
24.09.2020	ஹொக்கி டர்ப் விளையாட்டு மைதானம்	தடகள விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள்	16
28.09.2020	விளையாட்டு வைத்திய நிறுவனம்	இராணுவ தடகள நீண்டதூர ஓட்டப்பந்தய வீரர்கள்	11
03.10.2020	இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பணிப்பாளர் சபை குழுக்கூட்ட மண்டபம்	விளையாட்டு மருத்துவ டிப்ளோமா பெற்றுவர்கள்	13
14.11.2020	மெய்நிகர் விரிவுரை	ஊட்டச்சத்து சங்கம்	240
20.11.2020	மெய்நிகர் விரிவுரை	ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள்	46
25,26,27 மற்றும் 28.12.2020	சுகததாச தேசிய விளையாட்டு மைதானம்	98 வது தேசிய மெய்வல்லுனர் முதன்மைப் போட்டிகளின்போது இடம்பெற்ற "Out Reach "நிகழ்ச்சி	40
	மொத்தம்	**23**	**965**



பிலியட் மற்றும் ஸ்னூக்கர் விளையாட்டு வீரர்கள்



சபரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள்




ரக்பி வீரர்கள்



மெய்வல்லுனர் போட்டிகளுக்கான கனிஷ்ட குழாம்

ஆராய்ச்சிப் பிரிவு

1) இலங்கை மருத்துவ சங்கத்தின் 133 வது ஆண்டு சர்வதேச மருத்துவ மாநாட்டில் இலங்கை விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கு உணவுக் குறைநிரப்பிகளின் பாவனையால் எற்படக்கூடிய ஆரோக்கியம் சார்ந்த விளைவுகள் குறித்த ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடுதல்.
2) பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சியான, அரிஷ்டவில் ஏதேனும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் உள்ளனவா என்பதனைக் கண்டறிதல்,இலங்கையில் தேசிய அளவிலான விளையாட்டு வீரர்களின் உணவுக்குறைநிரப்பிகளின் பாவனை மற்றும் அவை பற்றிய அறிவு போன்றவற்றை அறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட இரண்டு ஆராய்ச்சித் திட்டங்கள் தொடர்பான முழு அறிக்கைகள் குறிப்பேடுகளில் வெளியிடுவதற்கான பரிந்துரையை வழங்குதல்.
3) இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி மீறல்கள், ஊக்குமருந்து சோதனைகளுக்காக பயன்படுத்தக்கூடிய உயிரியல் மாதிரிகளை இனங்காணல் மற்றும் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் சார் விளையாட்டு வீரர்களின் போசணை மட்டம் , இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையால் நடாத்தப்பட்ட ஊக்குமருந்து ஏதிர்ப்பு பற்றிய விழிப்புணர்வு தொடர்பான மதிப்பீடு ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
4) இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் ஆராய்ச்சி ஆய்வுகூடத்தை நிறுவுவதற்குத் தேவையான அடிப்படை ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப உபகரணங்களான Liquid Mass Spectroscopy போன்ற உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் ஆய்வுகூடத்தில் அவற்றை பொருத்துதல்.



தகவல் தொழிநுட்பப் பிரிவு

1. விளையாட்டு வீரர்கள் தாங்கள் இருப்பிடம் தொடர்பான தகவல்களை தொலைபேசியினூடாகப் புதுப்பித்துக்கொள்வதற்காக ADAMS சார்ந்த வழிகாட்டல்களை வழங்குதல்.
2. வாரந்தோறும் புதுப்பிக்கப்பட்ட தகவல் அறிக்கைகளைத் தயாரித்து அமைச்சகத்திற்கு வழங்குதல்.
3. சுற்றறிக்கையின்படி தொடர்பாடல் மற்றும் பணிகளைத் தொடர்வதற்காக ஊழியர்களை இணைத்துக்கொள்வதற்காக மென்பொருள் பயன்பாட்டிற்கான வழிகாட்டுதல்.
4. "DR app" செயலி தொடர்பான கட்டுரை வரைதல் மற்றும் தேசிய ஒலிம்பிக் குழுவின் இதழில் அதனை பிரசுரித்தல். இது தேசிய ஒலிம்பிக் குழுவின் "Good Sport Bulletin Issue – XII" Drug Reference app தொடர்பான கட்டுரையாகும்.


Monday 04th May 2020 ISSUE - 12

GoodSport NEWS

SRI LANKA OLYMPIC WEEKLY NEWS BULLETIN

Sitting by the Shore till the Surfers are Back

"Surfing is going through difficult times..." – Hiran

There's a world of sun and sand
Full of sky and far from land
Where evening breezes caress the shore
Like a gentle comforting hand
Fragrant blossoms, honey bees
Careless laughter upon the breeze
And lovers fading to pools of deep
Purple shadows among the trees

When I was a wee lad I used to listen to this song sung by the Danish Dutch singing duo Nina and Frederick and get teleported to a little corner of the world of my own. Now as a grey bearded scribe I experienced the same when I perambulated long the Arugam Bay Beach as a part of the Sri Lanka Olympic Media team last year while covering the "SO Sri Lanka Pro" World Surf League Men's QS3000. Though the mornings were full of hust e and bustle the fading skies had magic in it. Yet, for us it was the morning session that was important officially.

Continued on Page 07

Frame Stamps from Hashima City

Hashima City, the Host Town of Sri Lanka for Tokyo Olympic and Parlympic Games 2020, has created Host Town Fame stamps as a part of the Host Town project.

Hashima City has already made various efforts such as dispatching athletic instructors and supporting sports goods for athletes.

Continued on Page 05

SLADA Develops Drug Reference App

Drug Reference App developed by Sri Lanka Anti Doping Agency (SLADA) including prohibited status of medicines in Sri Lanka, for athletes and doctors, available for Android Devices with free of charge. Problem – Sri Lanka Anti-Doping Agency body for dooing related matters in Sports in Sri Lanka.

Continued on Page 03


Monday 04th May 2020 3

NOC NEWS

From Page 01

Considering our main objective, they have identified the main issue which is the lack of information regarding prohibited substances. Annually, World Anti-Doping Agency (WADA) declares a list of prohibited substances in sports. That list contains the names of each chemical compound, not the generic name of medicines, making it a more technical document. The WADA Prohibited List includes some substances which might cause unintentional doping for athletes as doctors are prescribing them for actual diseases.

Purpose:
To assist athletes to check the status of their medication purchased in Sri Lanka, as a part of promoting clean and fair sport in the country before this becomes a social menace.

Solution:
Mobile App in this digital world has a pivotal role, we have newly developed an Android mobile App calling DR App (Drug Reference App), containing all the relevant details on prohibited status of all registered medicines in Sri Lanka and there is an official website for this app.

App Features:
- Check for prohibited status of brands and ingredients (Indicated using colours as in the light system and very little look)
- Simple display of prohibited status, distinguishing "out of competition" and "in competition"
- Details on sports-specific characteristics
- Details concerning different routes of administration
- Information upon WADA substance classifications
- PDF download with search details or send as email to own e-mail.
- Save Searched items into the Quick search list
- Guidance activity for first time users and User Manual includes
- Quick Search

Benefits:
- Provides athletes and support personnel with information about the prohibited status of specific medications based on the current WADA Prohibited List
- Easy tracing
- Save search details for further reference
- Share information on prohibited status with others using any sharing method
- Doctors can see the prohibited status of the medicines before issuing for an athlete
- This App helps you keep up with the latest status and current status

Product Availability: Available on Google Play Store App

For more information on: http://slantidoping.org/icop.html

STOP THE SPREAD

A message from National Olympic Committee of Sri Lanka and Rotary International:

Sri Lanka's Badminton Golden star Thilini Hendahewa who won a Gold Medal in Badminton – Women's Doubles at the South Asian Games - Nepal 2019 brings this message to you!

5. கட்டார் ஆய்வுகூடத்திற்கு இறுதியாக அனுப்பப்பட்ட மாதிரிகள் தொடர்பான பரிசோதனை முடிவுகளுக்காக ADAMS இனைப் பரிசீலித்தல்.
6. தேவைக்கேற்றவாறு நிறுவனம் தொடர்பான அறிக்கைகளை அவ்வப்போது தயாரித்து சமர்ப்பித்தல்.
7. பணிப்பாளர் குழுக்கூட்டங்களை ஏற்பாடு செய்வதற்கான தேவையேற்படும்போது Jitsi செயலியின் மூலம் கூட்டங்களை ஒழுங்கமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்தல்.

8. இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மைக்கான ஒரு புதிய வழிமுறைக்கான முன்மொழிவுத் திட்டத்தை உருவாக்குதல் - Anti-Doping Education- The Athlete Learning Gateway on Anti-Doping (ALG on Anti-Doping).

9. கோவிட்-19 தடுப்பு குறித்து இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பணியாளர்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக Adobe Illustrator இனைப் பயன்படுத்தி வடிவமைப்புகளை உருவாக்குதல்.

10. இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மைக்கான "யூ டியூப்" அலைவரிசையை அமைத்து காணொளிகளை பதிவேற்றல்.

11. நிறுவனத்தின் பிரதான வலைத்தளத்தினை புதிய தகவல்களைக்கொண்டு புதுப்பித்தல்.



சட்டப்பிரிவு

1. 2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 2020 ஆம் ஆண்டிற்குள்ளும் ஊக்குமருந்து பாவனை உறுதிசெய்யப்பட்ட அனைத்து விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்தி அவை தொடர்பான இறுதி தீர்மானங்களை வெளியிடுதல்.

2. மேன்முறையீட்டு விசாரணையில் துள்ளியமான இறுதித் தீர்மானங்களை வழங்குவதற்காக மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட சுற்று விசாரணைகளை நடாத்துதல். அவ்வாறான ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் வாய்மூல மற்றும் எழுத்துமூல சமர்ப்பிப்புகளை ஒழுங்கமைத்தல் மற்றும் தேவையான சட்ட ஆலோசனைகளை பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

3. ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிமுறைகளுக்கான சட்டமாஅதிபருடைய ஒப்புதலைப் பெறுதல் மற்றும் அவற்றை அரச வர்த்தமானியில் மும்மொழிகளிலும் வெளியிடுதல்.

4. 2021 ஆம் ஆண்டிற்கான புதுப்பிக்கப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிமுறைகள் தொடர்பான “Webinar” சிலவற்றில் பங்கேற்றமை.

5. முதல் தடவையாக ஒரு விளையாட்டு வீரர் வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்துடன் இணைந்து விசேட விசாரணைகளை நடாத்தல்.

6. பணிப்பாளர் குழுக்கூட்டத்தினை நடாத்துவதற்காக புதிய பரிமாணமாக சம்பிரதாய முறைக்கு அப்பாற்பட்டவகையில், இணையத்தளத்தினூடான (Online) தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தல். (Jitsi Meet Application ஊடாக)

2021 ஆம் ஆண்டின் இலக்குகள் மற்றும் நோக்கு

1. CBL (Ceylon Biscuits Limited) நிறுவனத்துடனான தற்போதுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புதுப்பித்தல் மற்றும் அவ் ஒப்பந்தத்தின் விதிமுறைகளில் சில புதிய மாற்றங்களைச் செய்தல்.
2. 2021 ஆம் ஆண்டுக்கான ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பாக ஒழுக்காற்று மற்றும் மேன்முறையீட்டு குழு உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
3. விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் , மேன்முறையீட்டுக் குழுவிற்கான புதிய உறுப்பினர்கள் மூவரை நியமித்தல்.
4. விசாரணைப் பிரிவொன்று நிறுவப்பட்டு அதனூடாக ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான விதி மீறல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல்.
5. 2021 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் சட்டவரைஞர் திணைக்களத்தினூடாக முறையாக மொழிபெயர்க்கப்பட்டு அரச வர்த்தமானியில் மும்மொழிகளிலும் பிரசுரித்தல்.
6. 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட முன்று புதிய ஆராய்ச்சிகளை நிறைவுசெய்தல் மற்றும் அவற்றுடன் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடுதல்.
7. அரிஷ்டவில் ஏதேனும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் உள்ளனவா என்பதைக் கண்டறிவதற்காகவும் மற்றும் இலங்கையின் தேசிய மட்ட விளையாட்டு வீர வீராங்கணைகளின் உணவுக்குறைநிரப்பிகளின் பாவனை மற்றும் அவை தொடரபான அறிவு போன்றவற்றைக் கண்டறிவதற்காகவும் நடாத்தப்பட்ட இரண்டு ஆராய்ச்சித் திட்டங்களுக்கான முழுமையான ஆய்வறிக்கைகளை வெளியிடுதல்.
8. ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் இரசாயன ஆய்வுகூடத்தில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் தொடர்பான ஆய்வுகளை ஆரம்பித்தல்.
9. ஆய்வுகூட பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட திரவ-திணிவு நிறமாலைமானி தொடர்பான செயற்திறன் சோதனை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவுசெய்தல்.
10. அரச பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட ஏனைய அரச நிறுவனங்களை இவ் ஆய்வுகூடத்தைப் பயன்படுத்த அனுமதிப்பதன் மூலமாக இலங்கையில் ஆராய்ச்சிகளுக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தல்.
11. iOS இற்கான DR செயலியை வடிவமைத்தல்
12. Anti-Doping Education- The Athlete Learning Gateway on Anti-Doping (ALG on Anti-Doping விழிப்புணர்வு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக விளையாட்டு வீர வீராங்கணைகளின் அறிவுத்திறனை பரீட்சிப்பதற்காகவும், அவர்களுடைய அறிவு மட்டத்திற்கு ஏற்ப சான்றிதழ்களை வழங்குவதற்கும் இந்த அமைப்பு வடிவமைக்கப்படவுள்ளது
13. நிறுவனத்திற்கான யூடியூப் காணொளிகளை வடிவமைத்தல்.

31ம் திகதி மார்கழி 2020 இல்

உள்ளவாறான ஐந்தொகை	குறிப்பு	31ம் திகதி மார்கழி 2020	31ம் திகதி மார்கழி 2020
			(இலங்கை ரூபாய்)
சொத்துக்கள்			
நிலையான சொத்துக்கள்			
காணி,கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள்	1	225,864,722.09	208,530,974.49
மூலதனக் குறைவேலைகள்	2	60,211,400.00	65,268,791.03
		286,076,122.09	**273,799,765.52**
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்புக்கள்	3	1,805,639.63	2,018,589.00
வருமதிகள்	4	691,040.00	-
காசும் ஏனையவையும்	5	2,166,789.93	2,933,415.77
		4,663,469.56	**4,952,004.77**
மொத்தச் சொத்துக்கள்		**290,739,591.65**	**278,751,770.29**
மூலதனமும் பொறுப்புக்களும்			
நிதியிடல் :			
திறைசேரி நிதி	6	266,332,759.39	266,081,050.16
ஏனைய நிதி	7	2,198,212.88	2,951,335.38
திரண்ட நிதியம்	8.1	4,465,033.91	1,537,638.00
மீள்மதிப்பீட்டுத் தொகை	8.2	2,547,085.96	-
		275,543,092.14	**270,570,023.54**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
நிறுத்திவைக்கப்பட்டுள்ள நிதியம்	9	12,300,559.94	5,673,632.20
சென்மதிகள்	10	1,194,630.66	764,928.17
மீளளிக்கப்படும் வைப்புக்கள்		85,000.00	35,000.00
ஊழியருக்கான பணிக்கொடை ஏற்பாடு	11	1,616,308.91	1,708,186.38
		15,196,499.51	**8,181,746.75**
		290,739,591.65	**278,751,770.29**

மேற்படி நிதிக்கூற்றானது இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட பொதுத்தாபனங்களுக்கான நியமங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது

.....

திரு.எச்.எம்.சீ.ஜி.தயாரத்ன
கணக்காளர்

மேற்படி நிதிக்கூற்றுக்களின் தயாரித்தலுக்கும் வெளிப்படுத்துவதற்கும் இயக்குனர் குழுவினரே பொறுப்புடையவர்கள். இயக்குனர் குழுவின் கையொப்பத்திற்காக

.....
வைத்தியர்.சீவலி ஜயவிக்ரம
பணிப்பாளர் நாயகம்

.....
பேராசிரியர்.அர்ஜுன.டி.சில்வா
தலைவர்

இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான
முகவராண்மை (SLADA)
நிதிச்செயற்பாட்டுக் கூற்று

31ம் திகதி மார்கழி 2020 முடிவடைந்தஆண்டுக்கான அறிக்கை	குறிப்பு	2020	2019
			(இலங்கை ரூபாய்)
திறைசேரி நிதியம்	6	56,459,290.77	54,583,909.71
அமைச்சு நிதி	7.4	753,122.50	625,975.00
ஏனைய வருமானங்கள்	12	2,927,395.91	717,811.00
மொத்த வருமானங்கள்		60,139,809.18	55,927,695.71
நிர்வாகச் செலவினங்கள்	13	(57,212,413.27)	(55,209,884.71)
ஆண்டிற்கான மொத்த மிகைகள் / (பற்றாக்குறைகள்)		**2,927,395.91**	**717,811.00**

	குறிப்பு	2020	2019
			(இலங்கை ரூபாய்)
தொழிற்பாட்டுச் செயல்களால் ஏற்பட்ட காசுப்பாய்ச்சல்			
தேறிய மிகை		2,927,395.91	717,811.00
செம்மையாக்கல்			
தேய்மானம்		17,022,491.22	12,355,333.58
திறைசேரி நிதி ஏற்பாடு		(56,459,290.77)	(54,583,909.71)
		(36,509,403.64)	**(41,510,765.13)**
நடைமுறை மூலதனத்தின் மாற்றங்கள்			
(அதிகரித்தல்) / (குறைவு) இருப்புக்கள்		212,949.37	(907,749.14)
(அதிகரித்தல்) / (குறைவு) பரிசோதனைக்கான கட்டண வருமதிகள்		(691,040.00)	-
(அதிகரித்தல்) /(குறைவு) மீளளிக்கப்பட்ட வைப்புக்கள்		50,000.00	-
(அதிகரித்தல்) / (குறைவு) ஊழியருக்கான பணிக்கொடை ஏற்பாடு	11	(91,877.47)	270,191.10
(அதிகரித்தல்) / (குறைவு) நிறுத்திவைக்கப்பட்ட நிதி		6,626,927.74	(1,719,067.93)
(அதிகரித்தல்) / (குறைவு)செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுகள்		-	
(அதிகரித்தல்)/(குறைவு) அட்டூறுச்செலவுகள்		429,702.49	237,353.95
		6,536,662.13	**(2,119,272.02)**
செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்து பெறப்பட்ட தேறியகாசு		**(29,972,741.51)**	**(43,630,037.15)**
முதலீட்டு நடவடிக்கையிலிருந்து பெறப்பட்ட தேறியகாசு			
நிலையான சொத்துக்கொள்வனவு			(215,474,281.75)
மூலதனக் குறைவேலைகள்			123,871,618.07
திறைசேரி நிதி மீள் நிரப்பு			-
		(41,751,761.83)	**(91,602,663.68)**
நிதிச்செயற்பாடு மூலம் பெறப்பட்ட நிதி			
திறைசேரி நிதி		71,711,000.00	137,596,917.00
செயலாளர் - விளையாட்டுத்துறை அமைச்சு		(753,122.50)	(625,975.00)
		70,957,877.50	**136,970,942.00**
செயற்பாட்டிலிருந்து பெற்ற தேறியகாசு		**(766,625.84)**	**1,738,241.17**
ஆரம்ப காசுமீதி		**2,933,415.77**	**1,195,174.60**
இறுதி காசுமீதி		**2,166,789.93**	**2,933,415.77**

மூலதன பாய்ச்சல் கூற்று

31.12.2020 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மூலதன பாய்ச்சல் கூற்று

(இலங்கை ரூபாய்)

	மீள்மதிப்பீட்டுத் தொகை	திரண்ட நிதியம்	மொத்தம்
	இலங்கை ரூபாய்	இலங்கை ரூபாய்	இலங்கை ரூபாய்
ஆரம்ப மீதி 01.01.2015	-	110,540.00	110,540.00
தேறிய மிகை	-	94,999.91	94,999.91
இறுதி மீதி 31.12.2015	-	**205,539.91**	**205,539.91**
தேறிய மிகை		155,063.00	155,063.00
இறுதி மீதி 31.12.2016	-	**360,602.91**	**360,602.91**
தேறிய மிகை	-	29,800.00	29,800.00
இறுதி மீதி 31.12.2017	-	**390,402.91**	**390,402.91**
தேறிய மிகை	-	429,424.00	429,424.00
இறுதி மீதி 31.12.2018	-	**819,826.91**	**819,826.91**
தேறிய மிகை	-	717,811.00	717,811.00
இறுதி மீதி 31.12.2019	-	**1,537,637.91**	**1,537,637.91**
தேறிய மிகை	-	2,927,395.91	- 2,927,395.91
மீள்மதிப்பீட்டுத் தொகை	2,547,085.96	-	2,547,085.96
இறுதி மீதி 31.12.2020	**2,547,085.96**	**4,465,033.82**	**7,012,119.78**

31ம் திகதி மார்கழி மாதம் 2020 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று குறிப்புகள்

1. கணக்கீட்டு எண்ணக்கரு தொடர்பான அறிக்கைகள்

1.1 பொது

இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனமானது 2013 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2013 இல. 33 விளையாட்டுகளில் ஊக்கமருந்து பாவனைக்கெதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்திற்கமைய நிறுவப்பட்டுள்ளதுடன் நிறுவனத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமானது இல 363/12 இசுகததாச விளையாட்டரங்கு- ப்ளொக் டீ, ஸ்டேடியம் பாரக்கிங் ரோட், சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை கொழும்பு – 14 இல் அமைந்துள்ளது.

1.1 .1 நோக்கங்கள்

a) விளையாட்டிலிருந்து ஊக்குமருந்து பாவனையை பூண்டோடு அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

b) விளையாட்டுகளுடன் தொடர்புபட்ட ஊக்குமருந்து எதிரான பயன்பாடு தொடர்பான துறைகள் மற்றும் உரிய ஆராய்ச்சி உட்பட முகவர் நிறுவனத்திற்கு சமமான செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஏனைய சர்வதேச அமைப்புக்களுடன் பரஸ்பர ரீதியில் பரிசோதனை செயற்பாடுகளை நிகழ்த்துவதற்கான ஊக்குவிப்பை வழங்குதல்.

1.1.2. கணக்கீட்டு நியமம் தொடர்பான உறுதியுரைக் கூற்று

.நிறுவனத்தின் நிதிக்கூற்று அறிக்கைகளானது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட பொது நிறுவனங்களுக்கான கணக்கீட்டு விதிகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

1.1.3. நிதிக்கூற்றுத் தயாரித்தலுக்கான அடிப்படை கணக்கீட்டு எண்ணக்கரு

நிதிக்கூற்றுகளானது வரலாற்றுக்கிரைய எண்ணக்கருவுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது. பணவீக்கம் தொடர்பான விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

1.1.4. ஐந்தொகைக்குப் பின்னரான செம்மையாக்கல்

குறிப்பிடப்பட்ட செம்மையாக்கல் நடவடிக்கைகள் நிதிக்கூற்றுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளது

1.2. சொத்துக்களும் மதிப்பிடலும்

நடைமுறைச் சொத்துக்களானவை காசு, வங்கிமீதி மற்றும் ஏனையவை ஒரு வருட காலத்திற்குள் காசாக மாற்றப்படக்கூடியவை.

1.2.1 சொத்துக்கள்

நிலையான சொத்துக்கள் யாவும் பெறுமானத் தேய்வுக்கு உட்படுத்தப்பட்டவை.

1.2.2 நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்மானம்

தேய்மான ஏற்பாடானது நேர்கோட்டுமுறையில் கணிப்பிடப்படுகிறது. குறித்த வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அமைக்கப்பட்ட கட்டிடத்திற்கு முழு ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு கணிக்கப்படும். குறித்த ஆண்டிற்கான பெறுமானத் தேய்வானது வருடத்திற்கான வருமானச் செயற்பாட்டுக் கூற்றில் பதிவழிக்கப்படும்.

- கணினி மற்றும் உபகரணங்கள் 25 %
- தளபாடங்கள் 10 %
- ஏனைய உபகரணங்கள் 25 %
- மோட்டார் வாகனங்கள் 12.5 %
- ஆய்வுகூட உபகரணங்கள் 25 %
- ஆய்வுகூட தளபாடங்கள் 10 %
- கட்டிடங்டகள் 05 %

1.2.2 மீள்மதிப்பீடு

கணினி உபகரணங்கள் மற்றும் பிற உபகரணங்களின் மீள்மதிப்பீடானது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில்சார் நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகிறது. தேறிய மிகையானது சொத்தின் நிகர பெறுமதியினூடாக கணிக்கப்பட்டு சொத்தானது மீள்மதிப்பீட்டுத்தொகைக்கு மாற்றீடு செய்யப்படும்

1.2.3 கையிருப்புக்கள்

இலங்கை பொதுத்தாபனங்களுக்கான கணக்கீட்டு எண்ணக்கரு - 09 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம் கையிருப்பானது , மாற்றப்படமுடியாத கொடுக்கல் வாங்கலுக்கு அமைவாக கொள்வனவு செய்யப்பட்டது. இருப்பின் பெறுமதிமானது நியாயமாக உள்ளடக்கப்பட்ட கொள்முதல் பெறுமதி , இறக்குமதி வரிகளும் கட்டணங்களும் , போக்குவரத்துச் செலவினங்கள் ஏனைய கையாடல் செலவினங்களை கொண்டதாகும். இருப்புகளானது மனித சிறுநீர் மாதிரி சேகரிப்பு உபகரணங்கள், குதிரைகளுக்கான சிறுநீர் மாதிரி சேகரிப்பு உபகரணங்கள் மற்றும் மனிதர்களுக்கான இரத்த மாதிரி சேகரிப்பு உபகரணங்கள் என்பனவாகும்.

- மனித சிறுநீர் மாதிரி சேகரிப்பு உபகரணங்கள்
- குதிரைகளுக்கான சிறுநீர் மாதிரி சேகரிப்பு உபகரணங்கள்
- மனிதர்களுக்கான இரத்த மாதிரி சேகரிப்பு உபகரணங்கள்
- காகிதாதிகள்

1.3. நிதிக்கூற்று தயாரிப்பின்போது அடையாளங்காணப்பட்ட அனைத்துப் பொறுப்புக்களும் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. ஐந்தொகைக்கான தேதயிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் செலுத்தப்படவேண்டிய அல்லது கோரிக்கையின் பேரில் செலுத்தப்பவேண்டிய கொடுப்பனவுகள் நடைமுறைப் பொறுப்புக்களாக நிதிக்கூற்றில் அடையாளங்காட்டப்பட்டுள்ளன. நிலையான பொறுப்புக்கள் என்பது ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலப்பகுதிக்குள் செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுகளைக் குறிக்கும்

1.3.1 ஊழியர்களின் உரிமைகள்

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் தொடர்பான கொடுப்பனவுகள் யாவும் வருடத்திற்கான வருமானச் செயற்பாட்டுக் கூற்றில் செலவுகளாகக் காட்டப்படும்.

1.3.2. ஊழியர்களின் பணிக்கொடை கொடுப்பனவுகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 16 க்கு அமைவாக ஒவ்வொரு ஊழியருக்குமான பணிக்கொடை ஏற்பாடானது அவரது முதலாவது சேவைக்கால ஆண்டிலிருந்து கணிக்கப்படும். எவ்வாறாயினும் 1983 ஆம் ஆண்டு 12ம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கு அமைவாக தொடர்ச்சியாக ஐந்து வருடகாலச் சேவையினைப் பூர்த்திசெய்த ஊழியரே பணிக்கொடைக் கொடுப்பனவுக்கு உரித்துடையவர். இப்பணிக்கொடையானது ஒவ்வொரு ஆண்டு இறுதிமாதச் சம்பளத்தின் அரைப்பகுதியே செலவினமாகக் கணிக்கப்படும்

1.4. வருமானக்கூற்று

1.4.1 வருமானங்கள்

இலங்கை பொதுக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக வருமானங்கள் யாவும் அட்டுறு முறையில் கணிக்கப்பட்டுள்ளது.

1.4.2 செலவினங்கள்

வருமான மிகையானது எல்லாச்செலவுகளும் உள்ளடங்கலாக வருமான வரிக்கு முன்னரான இலாபத்தைக் குறிக்கும்.

செலவினங்களானது சொத்துக்கள் பராமரித்தலுக்கான செலவுகளையும் உள்ளடக்கியுள்ளது.

தொலைபேசிக் கட்டணங்கள்,மின்சாரம் மற்றும் நீர் தொடர்பான கொடுப்பனவுகள் உரிய ஊழியருக்கு செலுத்தப்படும்.

1.4.3 கொடைகள்

கொடைகளும் உதவிகளும் அதனுடன் தொடர்புடைய செலவுகளுடன் செம்மையாக்கப்படும். கொடைகளும் உதவிகளும் சொத்துக்களாக இருப்பின் குறிப்பிட்ட ஆயுட்கால அடிப்படையில் வருமானச் செலவுக்கூற்றில் பதிவழிக்கப்படும்.

1.4.4 ஏனைய நிதியங்களும் உதவிகளும்

ஏனைய நிதியங்கள் மற்றும் உதவிகளால் கிடைக்கப்பெற்ற நிதியானது அதனுடன் தொடர்புபட்ட செலவினங்களின் பின்னர் ஏதாவது நிலுவைகள் இருக்குமாயின் அவை குறித்த நோக்கங்கள்இ திட்டங்கள் முடிவடைந்த பின்னர் வருடாந்த வருமானக்கூற்று அறிக்கையில் பதிவழிக்கப்படும்.

- அமைச்சு நிதியம்

1.5. காசுப் பாய்ச்சல் கூற்று

1.5.1 காசு

திரவத்தன்மையுள்ள காசுமீதியும் வங்கிமீதியும் காசாகக் காட்டப்பட்டுள்ளது. ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல்க் கூற்றானது நேரில் முறையில் தயாரிக்கப்பட்டது.

1.5.2. ஐந்தொகைக்குப் பின்னான செம்மையாக்கல்

.குறிப்பிடப்பட்ட செம்மையாக்கல் நடவடிக்கைகள் நிதிக் கூற்றுக்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுக் குறிப்புகள்

31ம் திகதி மார்கழி 2020 முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக் குறிப்புகள்

குறிப்பு-1

சொத்துக்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்

(இலங்கை ரூபாய்)

செலவினங்கள்/ மீள்மதிப்பீடுசெய்யப்பட்டது	01.01.2020 இல் உள்ளவாறான மீதி	வருடத்தில் சேர்க்கப்பட்டவை	மீள்மதிப்பீட்டுக்கான செம்மையாக்கல்	31.12.2020 இல் உள்ளவாறான மீதி
கட்டிடங்களும் அமைப்புக்களும்	212,942,054.30	3,736,768.65	-	216,678,822.95
தளபாடங்கள்	873,436.35	-	-	873,436.35
கட்டிடங்களும் அமைப்புக்களும்	3,087,537.00	71,370.00	1,903,057.00	1,255,850.00
ஏனைய உபகரணங்கள்	2,657,312.00	148,685.66	476,347.66	2,329,650.00
வாகனங்கள்-WPLW-0353	6,024,980.00	-	-	6,024,980.00
ஆராய்ச்சிப் பிரிவுக்கான உபகரணங்கள்	179,928.00	10,975,914.25	-	11,155,842.25
ஆராய்ச்சிப் பிரிவுக்கான தளபாடங்கள்	-	16,876,414.30	-	16,876,414.30
	225,765,247.65	**31,809,152.86**	**2,379,404.66**	**255,194,995.85**

திரண்ட பெறுமானத்தேய்வு	01.01.2020 இல் உள்ளவாறான மீதி	வருடத்தில் சேர்க்கப்பட்டவை	மீள்மதிப்பீட்டுக்கான செம்மையாக்கல்	31.12.2020 இல் உள்ளவாறான மீதி
ட்டிடங்களும் அமைப்புக்களும்	10,647,102.72	10,833,941.15	-	21,481,043.86
தளபாடங்கள்	352,776.36	165,952.92	-	518,729.28
கணினிகளும் உபகரணங்களும்	2,893,260.50	138,835.00	3,032,095.50	-
ஏனைய உபகரணங்கள்	1,240,357.45	654,037.67	1,894,395.12	-
வாகனங்கள்-WPLW-0353	2,010,812.13	753,122.50	-	2,763,934.63
ஆராய்ச்சிப் பிரிவுக்கான உபகரணங்கள்	89,964.00	2,788,960.56	-	2,878,924.56
ஆராய்ச்சிப் பிரிவுக்கான தளபாடங்கள்	-	1,687,641.43	-	1,687,641.43
	17,234,273.16	**17,022,491.22**	**4,926,490.62**	**29,330,273.76**
31/12/2020 இல் உள்ளவாறான தேறிய ஏட்டுப் பெறுமதி	**208,530,974.49**	**14,786,661.65**	**(2,547,085.96)**	**225,864,722.09**

குறிப்பு-2

(இலங்கை ரூபாய்)

மூலதனக் குறைவேலைகள்	2020	2019
ஆராய்ச்சிப் பிரிவுக்கான உபகரணங்கள்	60,211,400.00	50,932,900.00
ஆராய்ச்சிப் பிரிவுக்கான தளபாடங்கள்	-	14,335,891.03
	60,211,400.00	**65,268,791.03**

கட்டிடக்குறைவேலை என்பது ஆராய்ச்சிப் பிரிவிற்கான தளபாடங்கள் மற்றும் LC-MS/MS உபகரணத்தின் கொள்வனவு போன்ற செலவினங்களைக்குறிக்கும். ஆராய்ச்சிப் பிரிவானது முழமையாக செயற்படும்போது அச்செலவினமானது சொத்துக்களாக மாற்றப்பட்டு கணக்கில்வைக்கப்படும்.

குறிப்பு-3

இருப்பு

இறுதி இருப்பு - மாதிரி சேகரித்தல் கருவிகள் (வீர வீராங்கணைகளுக்கானது)	1,054,576.13	1,664,253.00
இறுதி இருப்பு - மாதிரி சேகரித்தல் கருவிகள் (குதிரைகளுக்கானது)	115,710.00	121,800.00
இறுதி இருப்பு - மாதிரி சேகரித்தல் கருவிகள் (குருதிக்கானது)	-	232,536.00
இறுதி இருப்பு-எழுதுகருவிகள்	635,353.50	-
	1,805,639.63	**2,018,589.00**

குறிப்பு-4

10.வருமதியான பெறுவனவுகள்

பரிசோதனை வருமானங்கள்-இலங்கை கிரிக்கட்	691,040.00	-
	691,040.00	-

குறிப்பு-5

காசு மற்றும் காசுக்கு சமமானவையும்

இலங்கை வங்கி - கணக்கிலக்கம் (75463697)	2,166,789.93	2,933,415.77
	2,166,789.93	**2,933,415.77**

குறிப்பு-6

திறைசேரி நிதி

01.01.2020 இல் உள்ளவாறான மீதி	266,081,050.16	183,068,042.87
வரவுகள் -2020	71,711,000.00	137,596,917.00
பதிவழிக்கப்பட்ட நிதி 31.12.2020	(56,459,290.77)	(54,583,909.71)
மீளளிக்கப்பட்ட நிதி	(15,000,000.00)	-
31.12.2020 இல் உள்ளவாறான மீதி	**266,332,759.39**	**266,081,050.16**

குறிப்பு-7

7.ஏனைய நிதி

7.4 அமைச்சு நிதி

01.01.2020 இல் உள்ளவாறான மீதி	2,951,335.38	3,577,310.38
பதிவழிக்கப்பட்ட நிதி 2020	(753,122.50)	(625,975.00)
31.12.2020 இல் உள்ளவாறான மீதி	**2,198,212.88**	**2,951,335.38**

7.5 குறித்த ஆண்டிற்கான நிதிப்பட்டியல்

01.01.2020 இல் உள்ளவாறான மீதி	2,951,335.38	3,577,310.38
பதிவழிக்கப்பட்ட நிதி 2020	(753,122.50)	(625,975.00)
31.12.2020 இல் உள்ளவாறான மீதி	**2,198,212.88**	**2,951,335.38**

குறிப்பு-8

8.1 திரண்ட நிதியம்

ஆரம்ப மீதி 01.01.2020	1,537,638.00	819,827.00
வருட வருமான செயற்பாட்டு மிகை	2,927,395.91	717,811.00
இறுதி மீதி 31.12.2020	**4,465,033.91**	**1,537,638.00**

8.2 மீள்மதிப்பீட்டுத் தொகை

மீள்மதிப்பீட்டுத் தொகை	2,547,085.96	-
இறுதி மீதி 31.12.2020	**2,547,085.96**	-

குறிப்பு-9

நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிதி

ஜோர்ஜ் ஸ்டுவர்ட் என்ஜினியரிங் ப்ரைவட் லிமிட்டட்	2,549,144.14	5,098,288.28
அனெலிட்டிக்கல் இன்ஸ்ட்ருமன்ட்ஸ்	472,915.80	575,343.92
ஹேலீஸ் லைப் சயன்ஸ் ப்ரைவட் லிமிட்டட்	9,278,500.00	-
	12,300,559.94	**5,673,632.20**

குறிப்பு-10

அட்டுறுக்களும் சென்மதிகளும்

தொடர்பாடல் செலவுக்கான கொடுப்பனவு	83,003.78	28,789.76
மின்சாரம்,;நீர் விநியோகத்துக்கான செலவுகள்	170,091.90	132,734.40
குத்தகை வாகனக் கொடுப்பனவுகள்	216,000.00	216,000.00
வேதனங்களும் சம்பளங்களும்	5,000.00	8,000.00
மேலதிகக் கொடுப்பனவுக்கான நிலுவைகள்	74,798.55	25,946.21
பிரயாணச்செலவுகள்	151,220.00	-
விளம்பரங்களும் பிரச்சாரங்களும்	-	1,340.00
பாதுகாப்பு ஊழியருக்கான கொடுப்பனவு	190,814.00	166,185.00
பாதுகாப்பு ஊழியருக்கான கொடுப்பனவு	23,147.73	185,932.80
கணக்காய்வுக்கான கட்டணம்	117,600.00	-
ஊக்குமருந்து பரிசோதனைக் கட்டணம்	162,954.70	-
	1,194,630.66	**764,928.17**

குறிப்பு-11

ஊழியர்களின் பணிக்கொடைக்கான ஏற்பாடு

ஆரம்ப மீதி	1,708,186.38	1,437,995.39
வருடத்திற்கான ஊழியர்களின் பணிக்கொடைக்கான செலவினங்கள்	(103,337.50)	-
வருடத்திற்கான செலவு	11,460.03	270,190.99
இறுதி மீதி	**1,616,308.91**	**1,708,186.38**

குறிப்பு-12

ஏனைய வருமானங்கள்

ஊக்குமருந்து பரிசோதனை வருமானங்கள்	2,738,253.71	667,811.00
மீளளிக்கப்படாத வைப்புக்கள்	19,000.00	50,000.00
வாடகை வருமானங்கள்	67,500.00	-
ஏனைய வருமானங்கள்	102,642.20	-
	2,927,395.91	**717,811.00**

குறிப்பு-13

நிருவாகச் செலவுகள்

வேதனங்களும் சம்பளங்களும்	10,470,508.38	10,334,921.57
தவிசாளருக்கான கொடுப்பனவு	409,913.79	412,500.00
மேலதிக மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகள்	442,697.25	493,966.00
ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவு	1,223,474.93	1,202,143.73
ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவு	305,868.73	301,751.28
உள்நாட்டு பிரயாண மற்றும் எரிபொருள் செலவுகள்	600,000.00	695,000.00
வெளிநாட்டு பிரயாணமும் மற்றும் இணைந்தபடிச் செலவுகள்	21,860.00	1,116,591.64
எழுதுகருவிகளும் சிறுசெலவுகளும்	(207,694.49)	451,227.17
பிரயாண மற்றும் எரிபொருள் செலவுகள்	821,863.00	845,824.00
வாகனங்களுக்கான பராமரித்தல் செலவு	195,112.21	708,193.78
கட்டிடங்கள் பராமரித்தலுக்கான செலவு	357,918.00	112,878.28
உபகரணங்களும் இயந்திரங்களுக்குமான பராமரிப்புச் செலவு	637,902.28	218,387.48
பிரயாணச் செலவுகள்	1,115,445.00	1,131,975.50
தொழிற்பாட்டுக் குத்தகை வாகனத்திற்கான கட்டணம்	2,592,000.00	2,746,000.00
தொடர்பாடல் செலவுகள்	907,068.69	670,032.53
மின்சாரம்,நீர் விநியோகத்திற்கான செலவுகளும்	1,802,086.45	1,816,335.67
ஊக்கமருந்து பரிசோதனைக்கான செலவுகள் 13.1	11,521,640.07	9,482,020.40
விளம்பரங்கள் மற்றும் பிரச்சாரச்செலவுகள்	982,448.00	1,344,760.38
பயிற்சிகள் மற்றும் கூட்டங்கள் தொடர்பான செலவுகள்	679,034.00	1,692,122.47
அங்கத்துவ கட்டணங்கள் WADA,iNADO	304,688.80	2,362,123.51
கணக்காய்வு செலவுகள்	512,880.00	-
விநியோகமும் ஆராய்ச்சிக்குமான செலவுகள்	464,780.92	71,270.00
விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கான செலவுகள்	510,541.36	45,617.00
திறள்விருத்திச் செலவு	91,350.00	603,023.00
தேய்மானச் செலவுகள்	17,022,491.22	12,355,333.58
பணிக்கொடைக்கான வருடச்செலவு	11,460.03	270,190.99
பராமரிப்புச் செலவுகள்	1,334,770.65	2,025,854.75
பாதுகாப்பு ஊழியருக்கான செலவினங்கள்	2,080,304.00	1,699,840.00
	57,212,413.27	**55,209,884.71**

Translated Version - Tamil

தலைவர்,

ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான இலங்கை முகவராண்மை,

ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான இலங்கை முகவராண்மையின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் மற்றும் வேறு நடைமுறை மற்றும் சட்டரீதியான தேவைகள் மீதான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

1.நிதிக் கூற்றுகள்

1.1 கணக்காய்வு தொடர்பான அபிப்பிராயம்

ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான இலங்கை முகவராண்மையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று,நிதிப்பாய்ச்சல் கூற்று,காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுடன் தொடர்புடைய குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்புகளை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச்சட்டத்தின் 30 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினுடைய அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை உரிய காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான இலங்கை முகவராண்மையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றலினையும் ,காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2. கணக்காய்வு அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமத்தின் கீழ் எனது பொறுப்பு , அவ்வறிக்கையில் நீதி கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவின் கீழ் மேலும் விபரிக்கபட்டுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிரயாயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன்.

1.3. ஊக்குப்பதாரத்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையின் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய விபரங்கள்

இக் கணக்காய்வு அறிக்கை திகதிக்கு பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்ப்பார்க்கப்படும் முகவராண்மையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை உள்ளடக்கப்பட்டிருப்பதோடு நிதிக்கூற்று மற்றும் அது தொடர்பாக அறிக்கையில் உள்ளடக்கப்படாத விபரங்கள் ஏனைய விபரங்கள் என அறியப்படும். இவ் ஏனைய விபரங்கள் தொடர்பாக நிர்வாகமானது பொறுப்புக்கூறவேண்டும்.

நிதிக்கூற்று தொடர்பாக என்னுடைய அபிப்பிராயத்தில் ஏனைய விபரங்கள் உள்ளடக்கப்படாததோடு என்னால் எவ்வகையிலும் அவை தொடர்பாக சான்றுப்படுத்தப்படமாட்டாது அல்லது அபிப்பராயம் தெரிவிக்கப்படமாட்டாது.

நிதிக்கூற்று சார்பான என்னுடைய கணக்காய்வுக்கு ஏற்ப,மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய விபரங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியக்கூறு உள்ளபோது அவற்றை வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும்போது

ஏனைய விபரங்கள் நிதிக்கூற்றுடன் அல்லது கணக்காய்வின்போது வேறு வகையில் பெறப்பட்ட எனது அறிவிற்கு ஏற்ப பெறுமான ரீதியில் பொருத்தமற்றதாக உள்ளதா என கருத்திற்கொள்வதாகும்.

முகவராண்மையின் 2020 வருடாந்த அறிக்கையை வாசிக்கும்போது அதில் பெறுமான ரீதியான பிழை உள்ளது என நான தீர்மானிக்கும் பட்சத்தில் , உரிய திருத்தங்களை மேற்கொள்வதற்காக நிர்வாகத் தரப்பினருக்கு அவ்விடயங்கள் சம்பந்தமாக தொடர்பாடல் மேற்கொள்ளப்படவேண்டும். மேலும் உரிய திருத்தங்கள் செய்யப்படாத பிழைகள் காணப்படும் பட்சத்தில் அவை அரசியலமைப்பின் 154(6) ஆம் சட்டத்தின் பிரகாரம் உரிய காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் தரப்பினரின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பெரும்பான்மைமையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுகளைத் தயரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவமானது நிர்ணயிக்கின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கு நிர்வாகமானது பொறுப்பு வகிக்கின்றது

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போது , ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான இலங்கை முகவராண்மை நிறுவனத்தினை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதற்கான தகைமையை நிர்ணயிப்பதானது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகவராண்மையினை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கும்போது அல்லது வேறு மாற்றுவழி இல்லாத பட்சத்தில் பணிகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலேயன்றி தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதற்கான அடிப்படையின் பிரகாரம் கணக்குக்காட்டுதல் மற்றும் முகவராண்மையை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதற்கான எண்ணக்கருக்களை வெளிப்படுதல் போன்றவை முகாமைத்துவத்துக்கான பொறுப்பாகும்.

ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான இலங்கை முகவராண்மைக்கான நிதி அறிக்கைப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பான பொறுப்பு நிர்வாகத் தரப்பினரைச் சார்ந்ததாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப உறுப்புரையின் பிரகாரம் , முகவராண்மையின் ஆண்டுக்கான மற்றும் மாதாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு ஏற்றவகையில் வருமானம் ,செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறப்புக்கள் தொடர்பில் உரியமுறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படவேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றானது , மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பெரும்பான்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டது என நியாயமான உறுதிப்பாட்டை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் அடங்கிய கணக்காய்வு அறிக்கையை வழங்குதல் என்பவை எனது குறிக்கோள்களாகும். நியாயமான உறுதிப்பாடானது அதியுயர் உறுதிப்பாடாக இருப்பினும் இலங்கை கணக்கிட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வானது மேற்கொள்ளப்படும்பொது எப்பொழுதும் போதியளவான தவறான கூற்றுக்களை வெளிப்படுத்தும் உறுதிப்பாடாக அமையாது. மோசடி மற்றும் தவறுகள் தனித்து அல்லது கூட்டாக ஏற்படுத்தும் விளைவுகளால் தவறான கூற்றுக்கள் ஏற்படுவதுடன், இந்நிதிக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிப்பவர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானத்தின் மீது ஏற்படுத்தக்கூடிய பாதிப்பில் தங்கியுள்ளது..

தொழில்சார் ஒழுக்கநெறியுடனும் மற்றும் எவ்விதமான தொழில்சார் சந்தேகமும் இன்றி இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- மோசடி மற்றும் தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுகளின் ஆபத்தினை இனங்காண்கையில் மற்றும் மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக்கொள்வதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை எனது அபிப்பிராயம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. பெரும்பாண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படுத்தப்படும் பாதிப்பைவிட மோசடியால் ஏற்படுத்தப்படும் பாதிப்பு ஆதிகமாகும். அத்துடன் பிரதிநிதிகள் மூலமான மோசடி , போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் மோசடிகள் ஏற்படுவதற்கான காரணங்களாகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் வினைத்திறன் தொடர்பான அபிப்பிராயத்தை நோக்கத்தோடு அல்லாது சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக புரிந்துகொள்ளப்பட்டது.
- பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக்கொள்கை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகளின் தகுதி போன்றவை மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் மற்றும் நிலைப்பாடுகள் காரணமாக முகவராண்மையின் தொடர்ச்சியாக முன்னெடுத்துச்செல்லல் தொடர்பான போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு சான்றுகளின் அடிப்படையில் கணக்கீடு தொடர்பாக நிறுவனத்தின் தொடர்ச்சியாக முன்னெடுத்துச்செல்லல் தொடர்பான அடிப்படையைப் பிரயோகிப்பதற்கான இயைபுடைமையானது தீர்மானிக்கப்பட்டது. போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் அனுமானிப்பதானது நிதிக்கூற்றுகளில் அது தொடர்பான வெளிப்பாடுகள் மீது எனது கணக்காய்வு அறிக்கையின் கவனத்தை செலுத்தியதுடன் , அவ் வெளிப்பாடுகள் போதியளவு காணப்படாத பட்சத்தில் எனது அபிப்பிராயத்தை நான் மீளப்பெறவேண்டும். எவ்வாறாயினும் எதிர்காலத்தில் நிகழக்கூடிய சம்பவங்கள் மற்றும் நிலைப்பாடுகளின் அடிப்படையில் தொடரச்சியாக முன்னெடுத்துச்செல்லலுக்கான அடிப்படையானது நிறைவடையக்கூடும்.
- வெளிப்பாடுகளை உள்ளடக்கிய நிதிக்கூற்றுகளின் சமர்ப்பிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் போன்றவை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றுக்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமாக நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதானது மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் மூலம் கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு தொடர்பான கண்டுபிடிப்புகள் , பிரதான உள்ளக கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் மற்றும் ஏனைய காரணிகள் தொடர்பாக நிர்வாகம் செய்யும் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2. ஏனைய நடைமுறை மற்றும் சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2.1. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் தேவைகள் தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க,எனது அறிக்கையின் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள பாதிப்புகளை தவிர கணக்காய்வுக்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கமளித்தல்கள் என்னால் வழங்கப்பட்டுள்ளதுடன் , முகவராண்மையால் உரிய முறையில் நிதி அறிக்கை முன்னெடுத்துச் சென்றுள்ளமையானது எனது ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

2.1.2. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய முகவராண்மையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றானது கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

2.1.3. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய கடந்த ஆண்டில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.2. .பின்பற்றப்பட்டுள்ள நடைமுறைகள் மற்றும் பெறப்பட்டுள்ள சான்றுகளின் அடிப்படையில் மற்றும் மற்றும் போதியளவு காரணிகளுக்கான வரையறைக்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுகளை முன்வைக்கும் அளவிற்கு எதுவும் எனது கவனத்தை எட்டவில்லை.

2.2.1. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க முகவராண்மையின் நிர்வாகக்குழுவின் உறுப்பினர் ஒருவர் முகவராண்மை சம்பந்தப்பட்ட எந்தவொரு உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சாதாரண வர்த்தகம் சார் நிலைக்கு அப்பாற்பட்ட வகையில் தொடர்புடையவராவார் என்பது.

2.2.2. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (உ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க ஏதாயினும் இயைபுடைய எழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது முகவராண்மையின் நிர்வாகக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொதுவான விதிமுறைகளுக்கு இணங்க செயற்படவில்லை என்பது.

ஒழுங்கு விதிமுறைகள்/கட்டளைக்கான மேற்கோள்
நிதி ஒழுங்கு விதி 371(2)

அவதானிப்பு
உபகட்டுநிதியைப் பெறும் பதவிநிலைத்தரத்திலுள்ள உத்தியோகத்தரால் அது வழங்கப்பட்ட தேவை பூர்த்தியாக்கப்பட்டவுடனேயே தீர்க்கப்படல் வேண்டும். எனினும் நிறுவனத்தால் அவ்வாறான 09 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட உபகட்டுநிதியின் மொத்ததொகை ரூபாய் 237,400 ஆகக் காணப்பட்டதுடன் உபகட்டுநிதி தீர்க்கப்படவேண்டிய நாட்களானது 34 இலிருந்து 75 ஆக அதிகரித்திருப்பது அவதானிக்கப்பட்டது.

2.2.3. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க முகவராண்மையின் அதிகாரம் ,கடமைகள் மற்றும் நடைமுறைகளுக்கமைய செயற்படவில்லை என்பது

2.2.4. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க முகவராண்மையின் வளங்கள் பொருத்தமான வகையில்இ வினைத்திறனாக மற்றும் பயன்தரக்கூடிய வகையில் காலவரையறைக்குள் உரிய சட்டவிதிமுறைகளுக்கமைய திட்டமிட்டு பயன்படுத்தப்படவில்லை என்பது.

2.3. ஏனைய காரணிகள்

அ) ஊக்குமருந்து சோதனைகளை தீவிரமாக்குதல், அதிக எண்ணிக்கையிலான விளையாட்டுகளை உள்ளடக்கும் வகையில் ஊக்குமருந்து சோதனைகளை மேற்கொள்ளல் மற்றும் ஊக்குமருந்து மருந்து பாவனையால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள் பற்றி விளையாட்டு சமுதாயத்தினர் மத்தியில் விழிப்புணர்வை அதிகரித்தல் போன்றவற்றின் முன்னேற்றமானது 0 சதவீதத்திலிருந்து 49 சதவீதம் ஆகவும் பாரம்பரிய உள்நாட்டு உணவு மற்றும் பானங்கள் அத்துடன் மருந்துவகைகளில் உள்ளடங்கங்கூடிய தடைசெய்யப்பட்ட பதார்த்தங்கள் தொடர்பான ஆய்வுகள் அத்துடன் தகவல்களை புதுப்பித்தல் தொடர்பான முன்னேற்றம் 75 சதவீதத்திலிருந்து 100 சதவீதமாகவும் காணப்பட்டது.

ஆ) 2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முவராண்மையின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 28 ஆகும். தற்போது சேவையிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 19 ஆகக்காணப்பட்டதோடு 09 பதவிவெற்றிடங்கள் காணப்பட்டன. முகவராண்மையின் பரசோதனை மற்றும் கல்வி அத்துடன் செயற்படுத்தல் மற்றும் அமலாக்கல் ஆகிய 02 பிரிவுகளுக்கான பணிப்பாளர் மற்றும் பிரதிப்பணிப்பாளர் பதவிகளுக்கான 04 வெற்றிடங்கள் 2014 ஆம் ஆண்டு முதல் காணப்படுவதோடு அது நிறுவனத்தினது செயற்திறனில் நேரடியான பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்பது அவதானிக்கப்பட்டது.

இ) மீளாய்வுக்கான ஆண்டின் நிதிக்கூற்றில் மூலதனக்குறைவேலையில் ஆய்வுகூட உபகரணங்களின் கீழ் ரூபாய்.60,211,400 ஆகக் காணப்பட்டதோடு 2020 ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதிக்குள் அவ் உபகரணங்கள் நிறுவப்பட்டவேண்டியிருந்தது. 2020 மார்ச் மாதம் 15 ஆம் திகதி அவ்உபகரணங்கள் முகவராண்மைக்கு கிடைக்கப்பெற்றதோடு அவ்உபகரணங்களை தொழிற்படச்செய்வதற்கான பயிற்சி மற்றும் அவ்உபகரணங்களை பயன்படுத்துவதற்கான பரிசோதனை செயற்பாடுகள் தொடர்பான விசேட சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் கடிதங்களை அனுப்புதல் மற்றும் இணையத்தளத்தினூடாக பயிற்சிகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் அது தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதோடு அப் பயிற்சி நடவடிக்கைகள் நிறைவடையாததன் காரணமாக 2021 நவம்பர் மாதம் 16 ஆம் திகதியானபோதும் அவ்உபகரணங்களை பயன்படுத்துவதற்கு இயலவில்லை

டபிள்யு.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி